## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.438/2023

## 06.10.2025

## P.W.1- விஜய்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பிரதிவாதியை பணம் கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக பழக்கம். நாட்டாமங்கலம், அய்யம்பட்டியில் உள்ள எனது தோட்டத்திற்கு ஆட்களை தொட்டப்பநாயக்கனூரிலிருந்து வேலைக்கு அழைக்க செல்லும்போது கருப்பையாவுடன் பழக்கம் ஏற்பட்டது. கருப்பையா மூலம் தான் பிரதிவாதி எனக்கு பழக்கமானார். தொட்டப்பநாயக்கனூருக்கும், அய்யம்பட்டிக்கும் இடையே சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அங்கிருந்து தான் தோட்டத்திற்கு ஆட்களை அழைத்து செல்வேன். செட்டியபட்டியில் எனது தென்னந்தோப்பு உள்ளது என்றால் சரியல்ல, எனது அப்பாவுக்கு உள்ளது. அய்யம்பட்டியில் வயல் மற்றும் தென்னந்தோப்பு உள்ளது. நான் ஆசிரியர் பட்டப்படிப்பு முடித்துள்ளேன். எங்கள் வீட்டில் கார், பைக் உள்ளது என்றால் பைக் மட்டும் உள்ளது. எனக்கு கார் ஓட்ட தெரியும். நான் புரோநோட்டை கைவசம் வைத்திருந்தேன் என்றால் பிரதிவாதி பணம் கேட்டு வரும்போது வாங்கிக்கொண்டு வந்தார். எனது அப்பா, இதே பிரதிவாதி மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.315/2023 என வழக்கு இந்நீதிமன்றத்தில் நடப்பது தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவை வழக்கு விசாணைக்கு நான் தான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்துவிட்டு, தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தாவா வழக்கிற்கு 6 மாதங்களுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் தெரியாது. 2022லிருந்து பிரதிவாதியை நீதிமன்றத்தில் பார்த்திருந்தும், நான் குறிப்பிட்ட 20.11.2022ம் தேதியில் ரூ.5 லட்சத்தை பிரதிவாதிக்கு புரோநோட்டு மூலம் கடன் கொடுத்ததாக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு கொடுத்த நிரப்பப்படாத புரோநோட்டை வைத்து எனது தகப்பனாருக்கு ஆதரவாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தென்னந்தோப்பில்

பிரதிவாதியும், அவரது கணவரும் எவ்வளவு நாட்கள் வேலை பார்த்தார்கள் என்றால் ஞாபகமில்லை. வேலை பார்த்தார்கள். கூலி கொடுப்பதில் எனக்கும், பிரதிவாதிக்கும் ஆரம்பத்திலிருந்தே பிரச்சினை இருந்தது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 19.11.2021ம் தேதிய கிரைய ஒப்பந்த நகல் எனது தகப்பனாருக்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். 2021லிருந்து எனக்கும், எனது தகப்பனாருக்கும் பிரதிவாதிக்கும் பணம் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக பிரச்சினை இருக்கும்போது நான் குறிப்பிட்ட தேதியில் ரூ.5 லட்சம் கடனாக கொடுத்ததாக கூறுவது நம்பிக்கைக்குரியது அல்ல என்றாலும், வெத்து புரோநோட்டை வைத்து உற்பத்தி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாரிடம் உத்தரவாதமாக கொடுத்த புரோநோட்டை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.06 17:12:25 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.